## ஜனாசா தொழுகை

ஜனாசா தொழுகையில் நான்கு முறை தக்பீர் أَللهُ أَكْبَر சொல்லப்படும். முதல் தக்பீருக்குப் பின் த்ஸனா கீழக்கண்டவாறு ஓதவேண்டும்

سُبْحَانَكَ أَللّهُمَّ وَبِحَمْدِكَ، تَبَارَكَ اَسْمُكَ، وَتَعَالَى جَدُّكَ، وَلاَ إِلٰهَ غَيْرُكَ

பொருள்: எங்கள் இறைவனே, நீ பரிசுத்தமானவன், உன்னுடைய திரு நாமம் அருள்மிக்கது, உன்னுடைய மகத்தும் உயர்வானது உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை.

இரண்டாவது தக்பீருக்குப் பின் கீழக்கண்ட ஸலவாத் ஓதவேண்டும்

أَللّٰهُمَّ صَل عَلَى مُحَمَّد، وَعَلَى آل مُحَمَّد ، كَمَا صَلَّيْتَ عَلَى إبْرَاهِيم، وَعَلَى آل إبْرَاهِيمَ، إنَّكَ حَميد مَجيد. أَللّٰهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّد، وَعَلَى آل مُحَمَّد، كَمَا بَارَكْتَ عَلَى إبْرَاهِيمَ، وَعَلَى آل إبْرَاهِيمَ، إنَّكَ حَميد مَجيد.

*பொருள்: எங்கள் இறவனே, முஹம்மத் ﷺ அவர்கள்மீதும் முஹம்மத் ﷺ அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர்கள்மீதும் இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் ரஹ்மத்தைப் பொழிந்தவாறு அருள் புரிவாயாக, நிச்சயமாக, நீ புகழுக்குரியவனாகவும் மேன்மை மிக்கவனாவும் இருக்கின்றாய். எங்கள் இறைவனே, முஹம்மத் ﷺ அவர்கள்மீதும் முஹம்மத் ﷺ அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர்கள்மீதும் இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழிவந் தவர்கள்மீதும் பரக்கத்தை அருளியதுபோன்றே அருள் புரிவாயாக, நிச்சய மாக, நீ புகழுக்குரியவனாகவும் மேன்மை மிக்கவனாவும் இருக்கின்றாய்.*

மூன்றாவது தக்பீருக்குப் பின், வயது வந்த ஆண் அல்லது பெண்ணுடைய ஜனாசாவாக இருந்தால் கீழ்க்கண்ட துஆவை ஓதவேண்டும்

أَللّٰهُمَّ اغْفِرْ لِحَيِّنَا ، وَمَيِّتِنَا، وَصَغِيرِنَا، وَكَبِيرِنَا، وَذَكَرِنَا وَأُنْثَانَا، وَشَاهِدِنَا وَغَائِبِنَا، أَللّٰهُمَّ مَنْ أَحْيَيْتَهُ مِنَّا فَأَحْيِهِ عَلَى الإِسْلاَمِ، وَمَنْ تَوَفَّيْتَهُ مِنَّا فَتَوَفَّهُ عَلَى الإِيمَانِ

www.uzairfalahi.com

*பொருள்: எங்கள் இறைவனே, எங்களில் உயிருடனிருப்பவர்களையும், எங்களில் மரணித்துவிட்டவர்களையும், எங்களில் சிறுவர்களையும் பெரியவர்களையும், எங்களிலுள்ள ஆண்களையும் பெண்களையும், எங்களில் உள்ளூரில் இருப்பவர்களையும் உள்ளூரில் இல்லாதவர்களையும் மன்னித்தருள்வாயாக. எங்கள் இறைவனே, எங்களில் நீ யாரை உயிருடன் வைத்திருக்கின்றயாயோ அவர்களை இஸ்லாத்தின்மீது நிலைத்திருக்கச் செய்வாயாக, மேலும், எங்களில் நீ யாரை மரணிக்கச் செய்கின்றாயோ அவர்களை ஈமானுடன் மரணிக்கச் செய்வாயாக.*

ஜனாசா வயது வராத சிறுவர்களுடையதாக இருந்தால், கீழ்க்கண்ட துஆவை ஓதவேண்டும்.

**أَللّٰهُمَّ اجْعَلْهُ لَنا فَرَطًا، وَاجْعَلْهُ لَنَا أَجْرًا وَذُخْرًا، وَاجْعَلْهُ لَنَا شَافِعًا وَمُشفعًا**

*பொருள்: எங்கள் இறைவனே, இந்த சிறுவனை எங்களுக்காக நன்மையான ஒன்றாக ஆக்கிவிடு, அவனை எங்களுக்காக பிரதிபலனாகவும் பொக்கிஷமாகவும் ஆக்கிவை, அவனை எங்களுக்காகப் பரிந்துரைப்பவனாகவும் அவனுடையபரிந்துரைஎங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் ஆக்கிவை*

ஜனாசா வயது வராத சிறுபெண்ணுடையதாக இருந்தால், மேற்கண்ட துஆவில் **وَاجْعَلْهُ** என்பதற்குப் பதிலாக **وَاجْعَلْها** என்றும் **شَافِعًا وَمُشَفعًا** என்பதற்குப் பதிலாக **شَافِعَةً وَّمُشَفَّعَةً** என்றும் ஓதவேண்டும்.

* * *

www.uzairfalahi.com